1968 மார்ச் 23] [திரு. தி. சி. திம்மராய கவுண்டர்]

மேலும், திருப்பத்தூர் தாலுகா எலேக்கல் நத்தத்தில் ஒரு சிறிய நீர்ப்பாசனத் திட்டமும் இருந்து வருகிறது. அதையும் இந்த அரசு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாலை 6-00.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் கிணறுகள் வெட்டினால், சுமார் 15 அடி, 20 அடிக்குள் பாறை வந்துவிடுகிறது. ஒரு கிணறு வெட்டுவதற்குக் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. யூனியனில் புதிய கிணறுகள் வெட்டுவதற்குத் தரப்படும் கடன் இரண்டாயிரம் ரூபாய்தான். ஆனால் பழைய கிணறுகளைச் சீர்படுத்துவதற்குத் தரப்படும் கடன் தொகை 500 ரூபாய்தான். விவசாயிகள் கடன் வாங்கியும், கடன்காரர்களாகி வருகிறார்களே தவிர, அவர்களுக்கு எந்த விதப் பலனும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எங்கள் தொகுதியில் நாட்ராம்பள்ளி, கந்திலி யூனியன்களில், புதிய கிணறுகளுக்குக் குறைந்தது ஐயாயிரம் ரூபாயும், பழைய கிணறுகளுக்குக் குறைந்தது இரண்டாயிரம் ரூபாயும் கொடுத்து, விவசாய மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் தொகுதியில் ரொம்பவும் மழை இல்லாமல், வறண்ட பிரதேசமாக இருப்பதால், விவசாய மக்கள் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, எங்கள் திருப்பத்தூர் பகுதியை பஞ்சப் பிரதேசமாக எடுத்துக்கொண்டு, பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்காவிடில் ஏழை மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் விவசாயம் தவிர, வேறு தொழில் எதுவும் கிடையாது. மழை இல்லாததால் விவசாய மக்களுக்கு வேலைகள் கிடையாது. ஆகவே, அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புத் தர தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எங்கள் திருப்பத்தூர் தாலுகாவை பஞ்சப் பிரதேசமாக எடுத்துக்கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நான் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, படி அரிசித் திட்டம் எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படாவிட்டாலும், மாதா மாதம், ஏதாவது கோட்டா மாதிரி கொஞ்சம் அரிசியை —படி அரிசித் திட்டத்தின் கீழ்—ஒதுக்கித் தந்தால் ஏழை மக்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் விவசாயம் தவிர, வேறு தொழில்கள் கிடையாது. அதனால் ஏழை மக்கள் வாழ வழி கிடையாது. அதனால் கிராமப் பகுதிகளில் ஐந்து மைல், பத்து மைல் என்ற அளவிலாவது கிராமப்புறங்களில் சிறு தொழிற்சாலைகளை இந்த அரசு ஏற்படுத்தினால் கிராம மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று, ஏழை விவசாய மக்கள் வாழ வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசு கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை உடனடியாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

6. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஓர் அறிவிப்பு. சட்டப் பேரவை 6-வது விதிக்கிணங்க, திரு எஸ். முருகையன் அவர்களுக்குப் பதிலாக, திரு இராம. அரங்கண்ணல் அவர்களை மாற்றுத் தலைவராக நியமிக்கிறேன். அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசுவார்கள்.